வெளிநாட்டுக் குடியிருப்பாளர்களுக்கு /சமீபத்தில் ஜப்பானுக்கு வந்தவர்களுக்கு

தேசிய சுகாதாரக் காப்பீடு (NHI): ஜப்பானின் சுகாதாரப் பராமரிப்பின் முதுகெலும்பாகவிளங்கும் திட்டம்

நோய் அல்லதுகாயம் ஏற்பட்டால், நீங்களும்உங்கள்குடும்பத்தினரும் மருத்துவச் சேவை பெறுவதைஇந்தத் திட்டம் உறுதி செய்கிறது.

ஜப்பானில் வசிக்கும் அனைவரும், எந்த நாட்டவராக இருந்தாலும், பொது சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தில் கட்டாயமாகச் சேர வேண்டும். காப்பீட்டுப் பாதுகாப்பைப் பெற காப்பீட்டுக் கட்டணம் செலுத்துவது கட்டாயமாக இருந்தாலும், நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் நோய்வாய்ப்படும்போது அல்லதுகாயமடையும்போதுகுறைந்த நிதிச் சுமையுடன் மருத்துவச் சேவையைபெறுவதைஇந்தத் திட்டம் உறுதி செய்கிறது.


பொதுசுகாதாரக் காப்பீட்டின் நன்மைகள்

- நீங்கள் மருத்துவமனைக்கோ மருத்துவ மையத்திற்கோ செல்லும்போதுபொதுவாகமொத்த மருத்துவச் செலவுகளில்30% மட்டுமேசெலுத்தினால் போதும். மீதமுள்ள 70%-ஐக் காப்பீடு ஏற்றுக்கொள்வதால், நீங்கள் நேரடியாகச் செலுத்த வேண்டிய மருத்துவச் செலவுகள் கணிசமாகக் குறைகின்றன.
- அதிக மருத்துவச் செலவுகள் ஏற்பட்டால் நிதி உதவி வழங்குவதுபோன்ற, உங்கள் அன்றாட வாழ்க்கையைப் பாதுகாக்க உதவும் கூடுதல் திட்டங்களையும் இந்தக் காப்பீடு வழங்குகிறது.

பொதுசுகாதாரக் காப்பீட்டின் வகைகள் உங்கள் வேலைமற்றும் வயதைப்பொறுத்து மாறுபடும்.தேசிய சுகாதாரக் காப்பீடு என்பது, முக்கியமாக ஊழியர்களுக்கான சுகாதாரக் காப்பீடு அல்லது 75 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோருக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வராதவர்களுக்கானது. சுயதொழில் செய்பவர்கள், மாணவர்கள், வேலையில்லாதவர்கள் மற்றும் ஜப்பானில் மூன்று மாதங்களுக்கு மேல்தங்கியிருக்கும் வெளிநாட்டுக் குடியிருப்பாளர்கள் உட்பட, இந்தக் காப்பீட்டிற்குத் தகுதியுள்ள அனைவரும்இதில் சேரவேண்டும்.

தேசிய சுகாதாரக் காப்பீட்டில் யார் சேர வேண்டும்?


நீங்கள் ஜப்பானில் வசித்து, பின்வரும் பிரிவுகளில் ஏதேனும் ஒன்றின் கீழ் வந்தால், தேசிய சுகாதாரக் காப்பீட்டில் கட்டாயமாகச்சேரவேண்டும்.



தேசிய சுகாதாரக் காப்பீட்டிற்கு எவ்வாறு நிதி வழங்கப்படுகிறது?

மருத்துவச் செலவுகள்எவ்வாறு ஈடுகட்டப்படுகின்றன?

தேசியசுகாதாரக் காப்பீட்டின் கீழான மருத்துவச் செலவுகள், அதன் உறுப்பினர்கள் செலுத்தும் காப்பீட்டுக் கட்டணங்கள் மற்றும் வரி வருவாய்உள்ளிட்ட பொதுநிதி மூலம்ஈடுகட்டப்படுகின்றன. தேசியசுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஏற்படும் மொத்தமருத்துவச் செலவுகளில் சுமார் பாதி (50%) பொது நிதியிலிருந்து ஈடுகட்டப்படுகிறது.



தனிநபர்கள்மீதானசுமையைக் குறைத்து, ஒட்டுமொத்தசமூகமும்சுகாதாரப் பராமரிப்பைஆதரிக்கும் திட்டமாகஇந்தக் காப்பீடு செயல்படுகிறது.

தேசிய சுகாதாரக் காப்பீட்டின் மூலம்வழங்கப்படும் பலன்கள்மற்றும் மருத்துவச் சேவையைப் பெறுவது எப்படி

நீங்கள் தேசியசுகாதாரக் காப்பீட்டில் சேர்ந்திருந்தால், மருத்துவநிலையங்களில்நோய் அல்லது காயத்திற்குச் சிகிச்சை பெறும்போதுவரவேற்புமேசையில்உங்கள் 'மைநம்பர் கார்டு ' அல்லது 'சுகாதாரக் காப்பீட்டுத் தகுதிச் சான்றிதழ் ' ஆகியவற்றில் ஒன்றைக் காண்பிக்கவும்.
நீங்கள் பொதுவாகமருத்துவச் செலவுகளில்ஒரு பகுதியை (பெரும்பாலும்30%) மட்டும்செலுத்தினால் போதும்.

தேசியசுகாதாரக் காப்பீட்டின் கீழ், நீங்கள் பின்வரும் பலன்களைப்பெறலாம்.

- மருத்துவநிலையங்களில்மருத்துவப் பரிசோதனை,சிகிச்சை, மருந்துகள் போன்ற மருத்துவச் சேவைகள்
- மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டுத் தங்கியிருக்கும்போது ஆகும் உணவுச் செலவுகள்
- அதிக செலவுள்ளமருத்துவச் செலவுக்கானபலன்கள்: நீங்கள் நேரடியாகச் செலுத்தவேண்டிய மருத்துவச் செலவுகள்மிக அதிகமாகும்போது, ஒரு குறிப்பிட்ட வரம்புக்கு மேலானதொகைஉங்களுக்குத் திருப்பி வழங்கப்படும்

தேசிய சுகாதாரக் காப்பீட்டின் உறுப்பினர்கள் காப்பீட்டுக் கட்டணத்தைச் செலுத்தவேண்டும்.

காப்பீட்டுக் கட்டணங்கள், உங்கள் முந்தைய ஆண்டு வருமானம்மற்றும் குடும்பச் சூழ்நிலைகளின் அடிப்படையில்கணக்கிடப்படுகின்றன.
காப்பீட்டுக் கட்டணத் தொகையும், அதைக் கணக்கிடும் முறையும் நகராட்சிக்கு நகராட்சி மாறுபடும்.

நீங்கள்காப்பீட்டுக் கட்டணத்தைச்செலுத்தாவிட்டால், உங்கள்நகராட்சிஉங்களுக்குஒரு நினைவூட்டல் அறிவிப்பை அனுப்பும்.

நீங்கள் நீண்ட காலமாகக் காப்பீட்டுக் கட்டணம்செலுத்தாமல்இருந்தால், பின்வரும் பாதகங்களைச் சந்திக்க நேரிடலாம்.

- உங்கள் சொத்து பறிமுதல்செய்யப்படலாம்.
- உங்களுக்கான பலன்கள் கட்டுப்படுத்தப்படலாம்.மருத்துவ நிலையத்தில் முழு மருத்துவச் செலவையும் நீங்களே செலுத்தவேண்டியிருக்கலாம். இந்நிலையில், குறிப்பிட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால், அந்தத் தொகைஉங்களுக்குத் திருப்பி வழங்கப்படும்.
- ஜப்பானில் உங்கள் தங்கும் காலத்தைப் புதுப்பிக்கும்போதோ உங்கள் குடியிருப்பு அந்தஸ்தை (விசா வகையை)மாற்றும்போதோ,நீங்கள் காப்பீட்டுக் கட்டணம்செலுத்திய விவரம்கருத்தில் கொள்ளப்படும்.

தயவுசெய்து உங்கள்காப்பீட்டுக் கட்டணத்தைஉரிய தேதிக்குள் செலுத்துங்கள்.

கேள்வி – பதில்

கேள்வி 1. ஜப்பானுடன் சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துள்ள ஒரு நாட்டிலிருந்து நான் ஜப்பானுக்கு வந்தேன். நான் தேசிய சுகாதாரக் காப்பீட்டில் சேர வேண்டுமா?

சிலசூழ்நிலைகளில், நீங்கள் தேசியசுகாதாரக் காப்பீட்டில் சேரவேண்டிய அவசியம்இல்லாமல் இருக்கலாம். தயவுசெய்து உங்கள் நகராட்சியில் உள்ள தேசியசுகாதாரக் காப்பீட்டு அலுவலகத்தைத்தொடர்புகொண்டு, நீங்கள் சேரவேண்டுமாஎன்று கேளுங்கள்.

கேள்வி 2. நான் வேலையிலிருந்துவிலகி(ஓய்வு உட்பட), ஊழியர்களுக்கானசுகாதாரக் காப்பீட்டிலிருந்து வெளியேறிய பிறகு, தேசிய சுகாதாரக் காப்பீட்டில் சேருவதற்கான கடைசித்தேதிஎப்போது?

தயவுசெய்து 14 நாட்களுக்குள் உங்கள் நகராட்சியில் உள்ள தேசியசுகாதாரக் காப்பீட்டு அலுவலகத்தில்தேவையானநடைமுறைகளைமுடிக்கவும்.

கேள்வி 3. எனது காப்பீட்டுக் கட்டணத்தைச்செலுத்துவதில் சிரமம்ஏற்பட்டால் நான் என்ன செய்ய வேண்டும்?



நிதிக் காரணங்களால் காப்பீட்டுக் கட்டணத்தையோ நீங்கள் நேரடியாகச் செலுத்தவேண்டிய மருத்துவச் செலவுகளையோசெலுத்துவதில்சிரமம்இருந்தால், கட்டணக் குறைப்பு பெறவேதவணைமுறையில் செலுத்தவோ உங்களுக்கு வாய்ப்பு இருக்கலாம். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், கூடிய விரைவில்உங்கள் உள்ளூர் நகராட்சி அலுவலகத்தைஅணுகி ஆலோசனைபெறவும்.

தொடர்புக்கு

உங்கள்நகராட்சியில் உள்ளதேசிய சுகாதாரக் காப்பீட்டு அலுவலகம்

【நகராட்சியின் பெயர் 】 **橋本市保険年金課（はしもとしほけんねんきんか）**
【அலுவலகத்தொலைபேசிஎண்】 **0736-33-1111**
【அலுவலகஇருப்பிடம் 】 **橋本市東家1-1-1（はしもとしとうげ1-1-1）**

ひと、くらし、みらいのために
厚生労働省
Ministry of Health, Labour and Welfare